# சாதாரணகூட்டம்

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் தேதி வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு கோட்டக்குப்பம் நகராட்சியில் சாதாரணக் கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

தலைமை.திரு.ச.ஜெயமூர்த்தி, நகர்மன்ற தலைவர்,
கோட்டக்குப்பம் நகராட்சி

**பொருள் எண்:01**

கோட்டக்குப்பம் நகராட்சியில் வார்டு எண்.08, கோட்டைமேடு ஈ.சி.ஆர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள வாய்க்கால் தடுப்பு சுவர் ஃபெஞ்சல் புயலில் பெய்த கனமழையால் தடுப்பு சுவர் உடைந்து பொது மக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதால் அதனை சரி செய்யும் பொருட்டு சிறுபாலத்துடன் கூடிய தடுப்பு சுவர் அமைத்திட தோராய செலவினம் ரூ.15.00/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.353/2025/ இ1)

**பொருள் எண்:02**

கோட்டக்குப்பம் நகராட்சியில் வார்டு எண்.08, கோட்டைமேடு ராஜா நகர் அருகில் அமைந்துள்ள சிமெண்ட் பைப்புடன் கூடிய தரைபாலம் ஃபெஞ்சல் புயலில் பெய்த கனமழையால் சேதமடைந்து பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ளதால் ஆர்.சி.சி கல்வெட்டு அமைக்க தோராய செலவினம் ரூ.20.00/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.354/2025/ இ1)

**பொருள் எண்:03**

கோட்டக்குப்பம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) - 2024-25ன் கீழ் வார்டு எண்.14, தோப்பு தெருவில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளிதழில் விளம்பரம் வெளியிட்டது Ravi Publicity Service, சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.26,040/- மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2024/2024/ இ1)

**பொருள் எண்: 04**

கோட்டக்குப்பம் நகராட்சியில் 6வது மாநில நிதிக்குழு மான்ய திட்டம் 2023-24ன் கீழ் வார்டு எண்.12, ஜமியத் நகரில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளிதழில் விளம்பரம் வெளியிட்டது Graphic Connection Advertisement PVT Ltd, சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.53,340/- மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.931/2024/ இ1)

**பொருள் எண்: 05**

கோட்டக்குப்பம் நகராட்சியில் மூலதன மான்ய நிதி & இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2023-24ன் கீழ் வார்டு எண்.08, கோட்டைமேடு பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி தொட்டி அமைக்க மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளிதழில் விளம்பரம் வெளியிட்டது Sudha Ads, சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.18094/- மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.656/2023/ இ1)

**<u>பொருள் எண்:06</u>**

கோட்டக்குப்பம் நகராட்சியில் மூலதன மான்ய நிதி & இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2023-24ன் கீழ் வார்டு எண்.08, கோட்டைமேடு பகுதியில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைப்பதற்கு அப்பகுதி பொது மக்களால் எதிர்ப்பு தெரிவித்து சென்னை உயர் நிதிமன்றத்தில் W.P.No. 16282/2024ன் படி வழக்கு தொடரப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்த நிலையில் W.A.No.2602/2024ன் படி மேல்முறையீடு செய்யப்பட்டது. அவற்றிற்கான வழக்கு கட்டணம் பின்வருமாறு செலுத்த கோரி கூடுதல் தலைமை அரசு வழக்கறிஞர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

1. கூடுதல் தலைமை அரசு வழக்கறிஞர் ஆலோசனை கட்டணம் (Conference fees) – ரூ.45,000/-
2. கூடுதல் தலைமை அரசு வழக்கறிஞர் ஒரு நாள் வழக்கு கட்டணம் – ரூ.1,00,000/-
3. கூடுதல் அரசு வழக்கறிஞர் வழக்கு கட்டணம் – ரூ.33,000/-

மேற்படி தொகை ரூ. 1,78,000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.656/2023/ இ1)

**<u>பொருள் எண்:07</u>**

விழுப்புரம் மாவட்டத்திற்கு வளர்ச்சி பணி (ம) ஆய்வு கூட்டத்திற்கு வருகை தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வரவேற்று தினமலர் நாளிதழில் விளம்பரம் வெளியிட்டது. மேற்படி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.35,238/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.80/2025/இ1)

**<u>பொருள் எண்:08</u>**

கோட்டக்குப்பம் நகராட்சியின் 2024-2025ம் ஆண்டுக்கான திருத்தி வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2025-2026ம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு (வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 210/2019/இ1)

**<u>பொருள் எண்:09</u>**

கோட்டக்குப்பம் நகராட்சியில் ஏப்ரல் 2024 முதல் பிப்ரவரி 2025 வரையில் நடைபெற்ற திட்ட பணிகள் மற்றும் இதர பணிகளுக்கு ஒப்பந்ததாரர் பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி மற்றும் சரக்கு (ம) சேவை வரியினை உரிய ஒப்பந்தாரர் கணக்குகளுக்கு Vino & Co நிறுவனத்தின் மூலம் E-Filling செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டதற்குண்டானா செலவினம் ரூ.62695/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No | Particulers | Invoice No/ Date | Amount |
|---|---|---|---|
| 1 | GST Tax Deductor (TDS) Fees | 185/02-2024 | 2500 |
| 2 | | 186/03-2024 | 2500 |
| 3 | | 187/04-2024 | 2500 |
| 4 | | 188/05-2024 | 2500 |
| 5 | | 189/06-2024 | 2500 |
| 6 | | 190/07-2024 | 2500 |
| 7 | | 191/08-2024 | 2500 |
| 8 | | 192/09-2024 | 2500 |
| 9 | | 193/10-2024 | 2500 |
| 10 | | 194/11-2024 | 2500 |
| 11 | | 195/12-2024 | 2500 |
| 12 | | 196/01-2025 | 2500 |
| 13 | | 197/02-2025 | 2500 |
| 14 | | 198/03-2025 | 2500 |
| 15 | E-TDS Fees | 199/Non Salary 4th Quarter | 4585 |
| 16 | | 200/Salary 4th Quarter | 8050 |
| 17 | | 201/Non Salary 1th Quarter | 5020 |
| 18 | | 202/Non Salary 2th Quarter | 5020 |
| 19 | | 203/Non Salary 3th Quarter | 5020 |
| **மொத்தம்** | | | **62695/-** |

அலுவலக குறிப்பு

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.552/2024/டி1)

<u>பொருள் எண்:10</u>

கோட்டக்குப்பம் நகராட்சியில் 21.09.2016 முதல் 31.03.2023 வரை வரித்தண்டலராக பணிபுரிந்து 01.04.2023 முதல் 31.05.2023 வரை அரங்கண்டநல்லூர் பேரூராட்சிக்கு பணிமாறுதலில் சென்று வயது முதிர்வின் காரணமாக 31.05.2023ல் ஓய்வு பெற்ற திரு.த.தணிகாசலம் என்பவருக்கு இந்நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் காலம் கடந்த வரியினங்கள் மீது வசூலிக்கப்படாததால் பொறுப்புத் தொகையை தனியருக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. திரு.த.தணிகாசலம் என்பவரால் இந்நகராட்சி கருவூலகத்தில் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. தனியரின் சேமநலநிதியில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | | = ரூ.3,94,737/- |
| 2. தனியரால் நகராட்சி கருவூலகத்தில் செலுத்தப்பட்ட தொகை | | = ரூ1,85,134/- |
| | மொத்தம் | = <u>ரூ.5,79,871/-</u> |

சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண். W.P.No.1794/2024ல் மேற்காணும் தொகையை வழங்க கோரி வழக்கு தொடரப்பட்டது. உயர் நீதிமன்ற தீர்ப்பில் தனியருக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்களை நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கப்பெற்ற 4 வாரங்களுக்குள் வழங்குமாறு தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தனியருக்கு ரூ.5,79,871/- காசோலையாக வழங்கப்பட்டது. மேலும் சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண்.4464/2025ல் சேமநல நிதி தொகை ரூ.394737-க்கு வட்டி தொகை வழங்ககோரி தனியரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தனியருக்கு சேம நல நிதி வட்டி தொகை வழங்க கோரி வழக்கினை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு சேம நல நிதி வட்டி தொகை கணக்கீடு செய்யப்பட்டு உள்ளாட்சி நிதிதணிக்கை சென்னை, அவர்களுக்கு அனுப்பி நிதி பெறப்பட்டவுடன் அனைத்து பணியாளர்களுக்கும், வழங்க கால அவகாசம் தேவைப்படுகிறது. இந்நிலையில் திரு.த.தணிகாசலம் ஓய்வு பெற்ற வரித்தண்டலருக்கு வட்டி தொகை வழங்க நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தனியர் பணிபுரிந்துள்ள காலங்களுக்கு மட்டும் இந்நகராட்சியில் பொது நிதியிலிருந்து ரூ.104196/- வட்டி தொகையை தனியருக்கு வழங்கவும், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலிருந்து நிதி பெறப்பட்டவுடன் பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

2.நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.448/2024/சி1)

பொருள் எண்:11

கோட்டக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான காந்திரோடு கடை எண்.04, திரு.பா.கார்த்திகேயன் என்பவருக்கு உரிமம் அனுபவிக்க உத்தரவிடப்பட்டது. அதன்அடிப்படையில் கடையினை ஏற்று நடத்தி வந்த நிலையில் தற்போது கடையின் உரிமத்தினை அனுபவிக்க இயலவில்லை என தெரிவித்து கடை எண்.04னை திரும்ப ஒப்படைக்க சம்மதம் தெரிவிக்கப்பட்டதை ஏற்று காந்தி ரோடு கடை எண். 4ன் உரிமம் திரு.பா.கார்த்திகேயன் என்பவருக்கு வழுங்கப்பட்டதை ரத்த செய்தும், கேட்பு எண்.175/30னை 01.04.2025 முதல் நீக்கம் செய்யவும் மற்றும் பொது ஏலம் / குத்தகை நடத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்,

2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.343/2025/அ1)

பொருள் எண்:12

கோட்டக்குப்பம் நகராட்சியில் பகுதியில் கழிவுநீர் உறிஞ்சு வாகங்களுக்கான (Sewage Tankers) உரிய அறிவிப்பு மற்றும் மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் பணியினை மேற்கொள்ளும் நபர்களை (Manual Scavengers) கணக்கெடுப்பு குறித்து வெளியிடப்பட்டு கீழ்காணும் விவரப்படி பல்வேறு செய்திதாள் நிறுவனங்களில் இருந்து பட்டியல்கள் வரப்பெற்றுள்ளன, பட்டியல் தொகை ரூ.11861/- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் / நாள் | தொகை | செய்தி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | Express Publication (Madurai) Private Limited | TN1303941/ 01.06.2023 | 4007.00 | கழிவுநீர் உறிஞ்சு வாகங்களுக்கான குறித்து விளம்பரம் செய்தது. |
| 2 | இந்து தமிழ் திசை | 581-24/2025 22.12.2024 | 7854.00 | மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் பணியினை மேற்கொள்ளும் நபர்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | (Manual Scavengers) கணக்கெடுப்பு குறித்து விளம்பரம் செய்தது. |
| மொத்தம் | | | 11861.00 | |

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.130/2023/எச்1)

<u>பொருள் எண்:13</u>

கோட்டக்குப்பம் நகராட்சி 2024-25ம் ஆண்டிற்கு

1. புதிய குடிநீர் இணைப்பு
2. பழுது பார்ப்பு கட்டணம்
3. துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கட்டணம்
4. பெயர் மாற்றத்திற்கான கட்டணம் ஆகியவற்றிற்கு 5% உயர்வு செய்து கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை மன்றத்தின் பார்வைக்கு.

| Part - A (Pipe Materials I & II) / பொருட்கள் மற்றும் பணி ஆட்கள் | | | |
|---|---|---|---|
| **Sl.No** | **Description of Work** | **2021-2024** | **2025-2026** |
| 1 | Earthern Road for 4m | 4950.00 | 6917.00 |
| 2 | BT Road for 4m | 9474.00 | 10498.00 |
| 3 | CC/Paverblock Road for 4m | 9718.00 | 10880.00 |

| Part - B (Road Restoration and Supervision Charges) As Per UTIS / சாலை துண்டிப்பு மற்றும் மேற்பார்வை கட்டணம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Sl.No** | **Description of Work** | **Restoration Charges 2021-2024** | **5% Increase** | **Restoration Charges 2025-2026** | **Supervision Charges 2021-2024** | **5% Increase** | **Restoration Charges 2025-2026** |
| 1 | Earthern Road | 1234.00 | 62.00 | 1296.00 | 562.00 | 28.00 | 590.00 |
| 2 | BT Road | 2264.00 | 113.00 | 2377.00 | 562.00 | 28.00 | 590.00 |
| 3 | CC/Paverblock Road | 2756.00 | 138.00 | 2894.00 | 562.00 | 28.00 | 590.00 |

| Part - C (Blockage & Repair Works) As Per UTIS / குடிநீர் குழாய் அடைப்பு நீக்கம் மற்றும் பழுது பார்த்தல் | | | | |
|---|---|---|---|---|
| **Sl.No** | **Description of Work** | **Repair & Restoration Charges 2021-2024** | **5% Increase** | **Restoration Charges 2025-2026** |
| 1 | For Earthern Road/BT Road/ CC/Paverblock Road | 2000.00 | 100.00 | 2100.00 |

| Part - D (Name Transfer) As Per UTIS / பெயர் மாற்றக் கட்டணம் | | | | |
|---|---|---|---|---|
| **Sl.No** | **Description of Work** | **Name Transfer Charges 2021-2024** | **5% Increase** | **Name Transfer Charges 2025-2026** |
| 1 | For Earthern Road/BT Road/ CC/Paver block Road | 600.00 | 30.00 | 630.00 |

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 374/2025/இ1)